பெயார்பஸ்ட் காப்புறுதி லிமிடட்
(நிறுவனம் இலக்கம் : PB5180)
எக்சஸ் டவர் II (14 ஆம் மாடி),
278/4, யூனியன் இடம், கொழும்பு 02, இலங்கை
தொடர்பு இலக்கம் :+94 11 2428428 |
தொலைநகல் :+94 11 2438438
மின்னஞ்சல் : info@fairfirst.lk |
இணையதளம் : www.fairfirst.lk

**காப்புறுதி பத்திர தகவல் ஆவணம் (IPID)**

சகல நிர்மான ஆபத்துக்கள் காப்புறுதி **பத்திரம்**

**1. காப்பீட்டு விடயதானம்**

சகல நிர்மான ஆபத்துக்கள் காப்புறுதி பத்திரமானது, நிர்மானம், நிறுவுதல், அல்லது இயந்திராதிகள், அமைப்புக்கள் மற்றும் உபகரணங்களை பரீட்சித்தல் ஆகியவற்றின் கோது ஏற்படுகின்ற அதிர்பாரா, தீடீர் பௌதீக இழப்பு அல்லது சேதத்திலிருந்தும் நிர்மானம், றிறுவுதல் மற்றும் கட்டியெழுப்புதல் திட்டங்களுக்கு பூரண பாதுகாப்பை வழங்குகின்றது. இந்த செயற்பாடுகளினால் அல்லது அவை தொடர்பாக ஏற்படும் மூன்றாம் தரப்பு மீதான பொறுப்புக்கும் இது காப்பீடு வழங்குகின்றது.

காப்பதுறுதி செய்யப்பட்ட அம்சஙக்ள திட்ட தளத்தில் இறக்கப்படுவது அல்லது கட்டியெழுப்புதல் ஆரம்பித்தல் என்பதில் எது முதலில் நடைபெறுகின்றதோ அதிலிருந்து காப்பீடு தொடங்குகின்றது. வேறேதும் வகையில் உடன்பட்டிரா விடில், திட்டத்தை கையளித்தல், முதல் பரீட்சார்த்த செயற்பாடு அல்லது பரிசோதனை ஆரம்பத்தில் இருந்து நான்கு வாரங்கள் முடிவடைதல் என்பதில் எது முதலில் நடைபெறுகின்றதோ அத்துடன் காப்பீடு முடிவுறும்.

**2. எதனைக் காப்பீடு செய்கின்றது?**

**பொருட்கள் சேதம் (பிரிவு 1)**

- கட்டியெழுப்புதல், நிறுவுதல் அல்லது பரீட்சித்தலின் போது காப்புறுதி செய்யப்பட்ட அம்சங்களுக்கு ஏற்படும் எதிர்பாரா மற்றும் திடீர் பௌதீக இழப்பு அல்லது சேதத்தை காப்பீடு செய்கின்றது.
- அட்டவணையில் வேறாக குறித்துரைக்கப்பட்டு இருந்தாலன்றி, இடிபடுகளை அகற்றும் செலவினங்கள்.

**மூன்றாம் தரப்பு பொறுப்பு (பிரிவு 2)**

- மூன்றாம் தரப்பினர்களுக்கு ஏற்படும் எதேச்சையான உடற் காயத்துக்கான (மரணம் உட்பட) சட்டபூர்வ பொறுப்பு.

- கட்டியெழுப்புதல் வேலைகளின் போது மூன்றாம் தரப்பு சொத்தக்கு ஏற்படும் எதேச்சையான சேதம்.

1. **காப்பீடு செய்யப்படாதன யாவை? (ஒரே பார்வையில்)**
    - காப்புறுதி பெறுனர் அல்லது அவரின் பிரதிநிதியின் வன்முறையான செயற்பாடுகள் அல்லது பூரண உதாசீனம்.
    - முழுமையானதும், பகுதியானதுமான வேலை முடிவு.
    - தேய்மானடம், அரிப்பு, ஒட்சியேற்றம் அல்லது கிரமமான சிதைவு.
    - பிழையான வடிவமைப்பு, குறைபாடான பதார்த்தங்கள அல்லது வார்ப்பு, மோசமான கைவினைத்திறன்.
    - தண்டம், தாமதம் அல்லது ஒப்பந்த இழப்பு உட்பட விளைவாந்தன்மையான இழப்புக்கள்.
    - குறிப்பான புறக்குறிப்பினால் காப்பீடு செய்யபப்பட்டாலன்றி களவு.
    - இருப்பு சோதனையின் போதே கண்டுபிடிக்கப்பட்ட சேதம்.

4. **காப்புறுதிக் கட்டணம் செலுத்துகை**

பொதுவாக ஒரு வருட காலமாகிய காப்புறுதிக் காலத்துக்கு ஒரே செலுத்துகையில் செலுத்தப்பட வேண்டும்.

5. **காப்புறுதி பெறுனரின் கடப்பாடுகள்**

ஆபத்தின் மீதான ஏதும் முக்கிய மாற்றங்கள் அல்லது கோரிக்கையொன்றுக்கு வழிவகுக்கத்தக்க சம்பவம் பற்றி காப்புறுதி வழங்குனருக்கு உடனடியாக அறிவிக்க வேண்டும்.
ஏதும் பாதிப்புற்ற அம்சங்கள், காப்புறுதி வழங்குனரின் பிரதிநிதியின் பார்வைக்காக பாதுகாக்கப்பட வேண்டும். அத்துடன், மேலும் இழப்பு அல்லது சேதம் ஏற்படுவதை தவிர்ப்பதற்கான நியாயாமான சகல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்,
ஏதும் கோரிக்கையை விசாரணை செய்வதில் சம்பந்தப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிப்பது மற்றும் பரிசோதனைக்கு வசதி செய்தல் உட்பட முழு ஒத்துழைப்பையும் காப்புறுதி வழங்குனருக்கு வழங்க வேண்டும்.
காப்புறுதி வழங்குனரின் எழுத்து மூல முன் சம்மதமின்றி ஏதும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவோ அல்லது ஏதும் மூன்றாம் தரப்பு கோரிக்கையை ஈடு செய்யவோ கூடாது.

6. **முறைப்பாடுகளையும் இன்னல்களையும் கையாள்தல்**

**படிமுறை 1 – பெயார்பஸ்ட் இன்சூரன்ஸோடு தொடர்பு கொள்ளவும் –**

☎ +94 11 2428282 (மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 5.00 வரை) | ✉ – info@fairfirst.lk

உங்கள் விடயங்களை பெயாபஸ்ட்டின் பொறுப்பு & இணக்க குழுவுக்கு கொண்டு செல்லலாம்.

**படிமுறை 2 – (தீர்க்கப்படா விடின்) புறக் கொண்டு செல்லல் –**

- இலங்கை காப்புறுதி சீர்படுத்தல் ஆணையம் (IRCSL)

☎ +94 11 2335167 | ✉ info@ircsl.gov.lk | 🌐 www.ircsl.gov.lk

- காப்புறுதி குறைகேள் அதிகாரி

☎ +94 11 2505542 / +94 11 2505041 | ✉ info@insuranceombudsman.lk |

🌐 www.insuranceombudsman.lk

7. **மேலும் தகவலுக்கு எம்மை தொடர்பு கொள்ளவும் –**

**பெயார்பஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட்**

எக்சஸ் டவர் II (14 ஆம் மாடி), இல.278/4, யூனியன் இடம், கொழும்பு 02, இலங்கை

☎+94 11 2428428 | ✉ info@fairfirst.lk | 🌐 www.fairfirst.lk

**குறிப்பு** – பிரதான காப்பீடு மற்றும் அவசியமாயின், மேலதிக காப்பீடுகளினதும் சாராம்சம் ஒன்றை வழங்குவதே இந்த **IPID** இன் குறிக்கோளாகும். இது உங்களது குறிப்பான தனிநபர் பிரத்தியேக தேவைகளுக்கானதல்ல. முழுமையானதும் பிரத்தியேகமானதுமான தகவல்களை, ஒப்பந்தத்துக்கு முந்திய மற்றும் ஒப்பந்த நியதிகளில் பூரணப்படுத்தவும். உற்பத்தியின் விடுகைகள், உங்களது காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. **IPID** யானது, காப்புறுதியின் / ஒப்பந்தத்தின் அங்கமாகாது. எனவே, ஏதும் சச்சரவின் போது, காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளும் நிபந்தனைகளுமே மேலோங்கியிருக்கும்.